வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1898/ஆ3/2022 நாள் 22.06.2022

----

பொருள் : தொழிற்கல்வி – வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் – சார்ந்து.

பார்வை : சென்னை.6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.50510/ பிடி2/இ2/2021 நாள் 09.06.2022

----

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணைக்கிணங்க தொழிற்கல்வி பயிலும் மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்கல்வி பாடங்கள் தமிழ்நாடு திறன் தொழிற் சாலைகளின் தேவைகளுக்கேற்ப திறனைப்பெற்று உடனடி வேலை வாய்ப்பினை பெறுவர் என தெரிவித்துள்ளதன் அடிப்படையில் தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை சீரமைக்க (Revamping of Vocational Syllabus and Textbook) வல்லுநர்குழு அமைக்கப்பட்டுள்ளது.

எனவே தொழிற்கல்வி பாடத்தினை சீரமைக்க அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேல்நிலைப் பிரிவில் 11ஆம் வகுப்பிற்கான 12 தொழிற்கல்வி பாட நூல்களில் கீழ்கண்ட 8 பாட நூல்கள் மறு சீரமைக்கப்பட்ட பாடநூல்கள் மாணவர்களுக்கு 2022–2023ஆம் கல்வியாண்டில் வழங்கப்படவுள்ளது.

1. அடிப்படை இயந்திரவியல் (Basic Mechanical Engineering)
2. அடிப்படை மின் பொறியியல் (Basic Electrical Engineering)
3. அடிப்படை மின்னனு பொறியியல் (Basic Electronics Engineering)
4. நெசவியலும் ஆடை வடிவமைப்பும் (Textiles and Dress Designing)
5. செவிலியம் (Nursing)
6. வேளாண் அறிவியல் (Agricultural Sciences)
7. அலுவலக மேலாண்மையும் செயலியலும் மற்றும் தட்டச்சும் கணினி பயன்பாடுகளும் (Office Management and Secretaryship and Typography Computer Application)
8. தணிக்கையியல் (Auditing)

மேற்படி மறுசீரமைக்கப்பட்ட பாடநூல்களை மாணவர்களுக்கு கற்பிக்க ஏதுவாக மேற்கண்ட பாடங்களை கற்பிக்கும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு இணையதள (Online) வழியாக பயிற்சி கீழ்கண்ட நாட்களில் நடைபெறும். பயிற்சியில் சார்ந்த தொழிற்கல்வி ஆசிரியர்கள் Earphones உடன் தவறாமல் கலந்து கொள்ளும் வகையில் பணியிலிருந்து விடுவித்து அனுப்பிவைக்குமாறு சார்ந்த அரசு மேல்நிலைப பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | பயிற்சி நடைபெறும் நாட்கள் | பயிற்சி நடைபெறும் இடம் மற்றும் நேரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 2 | 20.06.2022 முதல் 25.06.2022 வரை | வி.ஐ.டி. நிகர்நிலை பல்கலைக்கழகம், காட்பாடி முற்பகல் 9.30 மணி முதல் | **பள்ளியில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மடிக்கணினி ஒன்றினை பயிற்சியில் கலந்துகொள்ளும் தொழிற்கல்வி ஆசிரியரிடம் கொடுத்தனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.** |

ஒம்/–xxxxxxx,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

குறிப்பு : தலைமையாசிரியர்கள் கண்டிப்பாக பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களிடம் கண்டிப்பாக மடிக்கணினி கொடுத்தனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள், அரசு மேல்நிலைப்பள்ளிகள்
1)காட்பாடி (ஆ), 2) முஸ்லீம், வேலூர்,3) விரிஞ்சிபுரம் 4) பொன்னை (ஆ), 5)பள்ளிகொண்டா(ஆ), 6) கே.வி.குப்பம் (ஆ), 7) பிரம்மபுரம், 8) காட்பாடி (ம), 9) ஈ.வெ.ரா.நா. வேலூர், 10) அனைக்கட்டு (ஆ), 11) விண்ணம்பள்ளி,
நகல் : மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்